செய்தி வெளியீடு எண்:367 நாள்:02.07.2021

<u>**செய்தி வெளியீடு**</u>

**இந்தியாவிலேயே முதன் முறையாக அரசு சார்ந்த கூட்டுறவு அமைப்பான இண்ட்கோசர்வ் நிறுவனம் பெற்ற நியாய வர்த்தகச் சான்றிதழை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.**

30,000-க்கும் மேற்பட்ட சிறு தேயிலை விவசாயிகள் பணிபுரியும் இந்தியாவின் மிகப் பெரிய தேயிலை கூட்டுறவு இணையமாக இண்ட்கோசர்வ் செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்தில் 16 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் உறுப்பினர்களாக உள்ளன. இண்டகோசர்வ் ஆண்டிற்கு சராசரியாக சுமார் 14 மில்லியன் கிலோ கிராம் தேயிலைத் தூளினை உற்பத்தி செய்து, நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கும், ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கும் முக்கிய பங்காற்றி வருகிறது.

இண்ட்கோசர்வ் நிறுவனத்திற்கு ஜெர்மனி நாட்டின் பான் (Bonn) நகரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஃப்ளோசர்ட் (FLOCERT) நிறுவனம் அளித்த நியாய வர்த்தகச் சான்றிதழை (Fair Trade Certificate) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் இன்று (2.7.2021) தலைமைச் செயலகத்தில், இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் முதன்மை செயலர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திருமதி சுப்ரியா சாஹூ, இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சி.ஜி. தாமஸ் வைத்யன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

•••••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9